நல்ல சிகிச்சை அளிக்கப்பட்டு அங்கேயிருந்து அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

குப்பைகள் தேக்கநிலையில் உள்ளது என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாள் முதற்கொண்டு, அன்றாட குப்பைகள் அன்றாடம் சென்னை மாநக்ராட்சியினால் அள்ளப்பட்டு எல்லாப் பகுதிகளும் சுத்தமாக இருக்கின்றவகையிலே வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அவருக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். கழிவுநீர் வெளியேற்றப்படுவதில் தாமதமாகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் அவர்கள் பேசும்போது கூறினார்கள். கழிவுநீரும் நல்ல முறையிலே வெளியேற்றப்பட்டு, மக்களை பாதிக்காதவகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

5. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சில பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிலுள்ள காலியிடங்களுக்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அப்பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-1 உறுப்பினர், அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு-1 உறுப்பினர், பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், சென்னைப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-1 உறுப்பினர். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2, உறுப்பினர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிர்வாகக் குழு-1 உறுப்பினர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், நிர்வாகக் குழு-1 உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், பெரியார் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை-2

2004 நவம்பர் 17] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக்காலம் 6-5-2006 வரையாகும். பிற பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 19-11-2004 (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனு படிவங்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் அன்றையதினமே (19-11-2004) பிற்பகல் 4-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20-11-2004 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம். வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 22-11-2004 (திங்கட்கிழமை) அன்று காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 1-30 மணிக்குமிடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் ஒன்பதாவது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்